இனிமையான குழந்தைகளே! நீங்கள் ராஜரிஷிகளாக இருக்கிறீர்கள். நீங்கள் இராஜ்யத்தை பலனாக அடைவதற்காக முயற்சி செய்ய வேண்டும். கூட கூடவே தெய்வீக குணங்களையும் கூட கண்டிப்பாக தாரணை செய்ய வேண்டும்.

கேள்வி: உத்தம புருஷர் ஆவதற்கான முயற்சி எது? எந்த விசயத்தின் மீது மிகுந்த கவனம் தேவை?

பதில்: உத்தம புருஷர் ஆக வேண்டும் என்றால் படிப்பின் மீது ஒரு போதும் கோபித்துக் கொள்ளக் கூடாது. சண்டை சச்சரவில் ஈடுபடக்கூடிய எந்த விசயமும் படிப்புடன் தொடர்புடையதல்ல. படித்தீர்கள், எழுதினீர்கள் என்றால் ஆவீர்கள் நவாப்.. (தலைவன்).(என்று சொல்லப்படுகிறது). ஆகையால் எப்போதும் தனது முன்னேற்றத் திற்கான சிந்தனை இருக்க வேண்டும். நடத்தையின் மீது மிகவும் கவனம் தேவை. தேவதைகள் போல ஆக வேண்டும் என்றால் நடத்தை மிகவும் ராயலாக (ராஜாக்கள் போல உயர்வாக) இருக்க வேண்டும். மிக மிக இனிமை யானவர் ஆக வேண்டும். அனைவருக்கும் இனிமையாக அனுபவம் செய்யும் படியான வார்த்தைகள் வாயிலிருந்து வெளிப்பட வேண்டும். யாருக்கும் துக்கம் ஏற்படக் கூடாது.

ஓம் சாந்தி. இனிமையிலும் இனிமையான குழந்தைகளுக்கு தந்தை வந்து புரிய வைக்கிறார், மேலும் உங்கள் புத்தி எங்கே நிலைத்துள்ளது? என்றும் கேட்கிறார். மனிதர்களின் புத்தியோ சில சமயம் இங்கே, சில சமயம் அங்கே என்று அலைந்தபடி இருக்கிறது. உங்கள் புத்தி அலைவதை நிறுத்துங்கள் என்று தந்தை புரிய வைக்கிறார். புத்தியை ஒரு இடத்தில் நிலை நிறுத்துங்கள். எல்லைக்கப்பாற்பட்ட தந்தையை மட்டுமே நினைவு செய்யுங்கள். இப்போது முழு உலகமும் தமோபிரதானமாக உள்ளது என்று ஆன்மீகக் குழந்தைகள் அறிவார்கள். ஆத்மாக்கள்தான் வரிசைக் கிரமமான முயற்சியின்படி சதோபிரதானமாக இருந்தனர். இப்போது தமோபிரதானமாக ஆகி யுள்ளனர், மீண்டும் சதோபிரதானமாக ஆக வேண்டும் என்று தந்தை கூறுகிறார் . ஆகையால் தமது புத்தியை தந்தையுடன் ஈடுபடுத்துங்கள். இப்போது வீடு திரும்ப வேண்டும். மற்ற யாருக்கும் நாம் வீடு திரும்ப வேண்டும் என்பது தெரியாது. குழந்தைகளே, தந்தையாகிய என்னை நினைவு செய்யுங்கள் என்ற வழி கிடைக்கப்பெறுபவர்கள் வேறு யாரும் இருக்க முடியாது. எவ்வளவு எளிதான விசயங்களைப் புரிய வைக்கிறார். தந்தையை நினைவு மட்டும் செய்தீர்கள் என்றால் உங்கள் பாவ கர்மங்கள் அழியும். வேறு யாரும் இப்படி புரிய வைக்க முடியாது. தந்தைதான் புரிய வைக்கிறார். (பாபா) யாருக்குள் பிரவேசம் ஆகியுள்ளாரோ அவரும் கூட கேட்கிறார். தூய்மையற்ற நிலையிலிருந்து தூய்மையாவதற்கு மற்றும் அதன்படி நடப்பதற்கு அனைத்தையும் விட நல்ல வழியை தந்தை கொடுக்கிறார். நீங்கள் தான் சதோபிரதானமாக இருந்தீர்கள், இப்போது மீண்டும் அப்படி ஆக வேண்டும் என்று தந்தை கூறுகிறார். நீங்கள் தான் ஆதி சனாதன தேவி தேவதா தர்மத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தீர்கள். பிறகு 84 பிறவிகள் அனுபவித்து சோழி போல் (மதிப் பில்லாமல்) ஆகிவிட்டீர்கள். நீங்கள் வைரத்தைப் போல் இருந்தீர்கள்,

இப்போது மீண்டும் அப்படி ஆக வேண்டும். பாபா மிகவும் எளிதான விசயம் புரிய வைக்கிறார் - தன்னை ஆத்மா என புரிந்து கொள்ளுங்கள். ஆத்மாக்கள்தான் திரும்பிச் செல்ல வேண்டும், சரீரம் செல்லாது. தந்தையிடம் மிகவும் குஷியுடன் செல்ல வேண்டும். தந்தை கொடுக்கும் ஸ்ரீமத் மூலம் தான் நீங்கள் உயர்வான வர் ஆவீர்கள். தூய்மை யான ஆத்மாக்கள் மூலவதனத்திற்குச் சென்று, பிறகு (சத்யுகத்திற்கு) வந்தார்கள் என்றால் புதிய சரீரம் கிடைக்கும். இது நிச்சயமானது அல்லவா. ஆதலால் இதே தீவிர சிந்தனை இருக்க வேண்டும். தெய்வீக குணங்களும் தாரணை செய்ய வேண்டும், அப்போது மிகவும் லாபம் கிடைக்கும். நன்றாகப் படிக்கும் மாணவர்கள் தான் உயர்ந்த பதவியை அடை கின்றனர். இதுவும் படிப்பே ஆகும். நீங்கள் ஒவ்வொரு கல்பமும் இப்படித்தான் கற்றுக் கொள்கிறீர்கள். தந்தை கூட ஒவ்வொரு கல்பமும் இப்படித்தான் கற்பிக்கிறார். கடந்து முடிந்த காலம் நாடகத்தின் படி இருந்தது. நாடகத்தின்படிதான் தந்தை மற்றும் குழந்தைகளின் நடிப்பு நடந்தது. பாபா சரியான வழியைக் கொடுக்கிறார் அல்லவா. பாபா நாங்கள் உங்களை அடிக்கடி மறந்து விடுகிறோம் என்று குழந்தைகள் கூறுகின்றனர். இதுதான் மாயாவின் புயல் காற்று. மாயா தீபத்தை அணைத்து விடுகிறது. தந்தையை ஜோதி என்றும் கூறுகின்றனர். சர்வ சக்திவான் (அத்தாரிட்டி) உள்ளவர் (அதிகாரம்) என்றும் கூறுகின்றனர். என்னென்ன வேத சாஸ்திரங்கள் உள்ளனவோ அவை அனைத்தின் சாரத்தை புரிய வைக்கிறார். அவர் ஞானம் நிறைந்தவர் ஆவார். சிருஷ்டியின் முதல் இடை கடைசியின் ரகசியத்தைப் புரிய வைக்கிறார். இந்த பிரம்மா பாபாவும் கூறுவார் - நான் குழந்தைகளுக்கு புரிய வைக்கிறேன். தந்தை கூறுவார் - குழந்தைகளாகிய உங்களுக்குப் புரிய வைக்கிறேன். இதில் இந்த பிரம்மா வும் வந்து விடுகிறார். இதில் குழப்ப மடையக்கூடிய விசயம் எதுவுமில்லை. இது மிகவும் சகஜமான இராஜயோகம். நீங்கள் ராஜரிஷி களாக உள்ளீர்கள். ரிஷி என்று தூய்மையான ஆத்மாக்கள் கூறப்படுகின்றனர். உங்களைப் போன்ற ரிஷி வேறு யாரும் இருக்க முடியாது. ஆத்மாவைத் தான் ரிஷி என்று கூறப்படுகிறது. சரீரத்தைக் கூறுவதில்லை. ஆத்மா ரிஷியாக இருக்கிறது. ராஜரிஷி. இராஜ்யம் எங்கிருந்து பெறுகின்றனர்? தந்தையிடமிருந்து. ஆக குழந்தைகளாகிய உங்களுக்கு எவ்வளவு குஷி இருக்க வேண்டும். நாம் சிவ பாபாவிடமிருந்து இராஜ்ய பாக்கியம் அடைந்துக் கொண்டிருக்கிறோம். தந்தை நினைவு படுத்தியுள்ளார். நீங்கள் உலகின் எஜமானாக இருந்தீர்கள். பிறகு மறுபிறவி எடுத்து எடுத்து கிழே இறங்கியபடி வந்தீர்கள். தேவதைகளின் சித்திரங்களும் உள்ளன. ஜோதியுடன் ஜோதியாக கலந்து விட்டார் என்று மனிதர்கள் புரிந்து கொள்கின்றனர். ஒரு மனிதன் கூட ஜோதியுடன் ஜோதியாக கலக்கவில்லை என்று தந்தை புரிய வைத்துள்ளார். யாரும் முக்தி, ஜீவன் முக்தியை அடைய முடியாது. ஆக, முழு நாளும் குழந்தைகளுக்குள் சிந்தனை ஓட வேண்டும். எந்த அளவு நினைவில் இருப்பீர்களோ அந்த அளவு குஷியுடன் இருப்பீர்கள். படிப்பைப் படிப்பிக்கக் கூடியவர் யார் என்று பாருங்கள்.

கிருஷ்ணரை லார்ட் கிருஷ்ணா என்றும் கூறுகின்றனர். பகவானை ஒருபோதும் லார்ட் என்று கூற மாட்டார்கள். அவரை இறைத் தந்தை என்றே கூறுவார்கள். அவர் சொர்க்கத்தின் இறைத் தந்தை ஆவார். அவர்தான் சொர்க்கத்தின் இறைத் தந்தை என்பது நீங்கள் இதய பூர்வமாக உணர்கிறீர்கள். சொர்க்கம் அதாவது தெய்வீக இராஜ்யத்தை ஸ்தாபனை செய்து கொண்டிருக்கிறார். சத்யுகத்தில் வேறு தர்மம் இருக்கவில்லை. தேவதைகளின் படங்கள் கூட உள்ளன. அவர்கள்

தான் ஆதி சனாதன தேவி தேவதா என்று கூறப்படுகிறார்கள். இவர்கள் உலகின் எஜமானாக இருந்தனர். அவர்கள் சத்யுகத்தவர்கள் என்று கூறுவோம், நீங்கள் சங்கம யுகத்தவர். பாபா நம்மை சரியானவராக ஆக்குகிறார் என்று நீங்கள் அறிவீர்கள். நீங்கள் தூய்மையானவராக ஆகிக் கொண்டே செல்கிறீர்கள். விகாரிகள் தூய்மையற்றவர்கள் என்று கூறப்படுகின்றனர். இந்த தேவதைகள் தூய்மையானவர்கள். ஒளிவட்டமும் கூட தூய்மையுடையதைக் காட்டியுள்ளனர். சரியற்றவர் என்றால் ஒரு காலடி (நடத்தை) கூட சரியாக இல்லை. சிவாலயத் திலிருந்து கீழே இறங்கி வேசியாலயத்திற்கு வருகின்றனர். இந்த விசயங்களை புதியவர்கள் யாரும் புரிந்து கொள்ள முடியாது. எதுவரை அவர்களுக்கு நீங்கள் இவர் சொர்க்கத்தின் இறைத் தந்தை என்று அவருடைய அறிமுகத்தைக் கொடுக்கவில்லையோ அதுவரை அவர்கள் புரிந்து கொள்ள மாட்டார்கள். சொர்க்கம் மற்றும் நரகம் என இரண்டு வார்த்தைகளும் உள்ளன. சுகம் மற்றும் துக்கம். சொர்க்கம் மற்றும் நரகம். பாரதத்தில் சுகம் இருந்தது, இப்போது துக்கம் உள்ளது என நீங்கள் அறிவீர்கள். பிறகு தந்தை வந்து சுகம் கொடுக்கிறார். இப்போது துக்கத்தின் நேரம் முடிய வுள்ளது. பாபா குழந்தைகளுக்காக சுகத்தின் பரிசு கொண்டு வருகிறார். அனைவருக்கும் சுகத்தைக் கொடுக்கிறார். ஆகையால் அனைவரும் அவரை துதிக்கின்றனர். சன்னியாசிகள், துக்கமுற்றவர்கள் கூட தவம் செய்கின்றனர். அவர்களுக்கும் கூட ஏதாவது ஒரு ஆசை கண்டிப்பாக இருக்கும். சத்யுகத்தில் இப்படிப்பட்ட எந்த விசயமும் கிடையாது. அங்கே வேறு தர்மத்தைச் சேர்ந்தவர்கள் யாரும் இருப்பதில்லை. நீங்கள் புதிய உலகிற்குச் செல்வதற்காக முயற்சி செய்து கொண்டிருக் கிறீர்கள். அது சுகதாமம், அது சாந்தி தாமம், இது துக்கதாமம் என்று அறிவீர்கள். நீங்கள் இப்போது சங்கமத்தில் இருக்கிறீர்கள். உத்தம புருஷர் ஆவதற்காக முயற்சி செய்கிறீர்கள். மிகவும் நல்ல முறையில் முயற்சி செய்ய வேண்டும். படிப்பின் மீது ஒரு போதும் கோபித்துக் கொள்ளக் கூடாது. யாரிடமாவது கருத்து வேறுபாடு ஏற்பட்டால், படிப்பை விட்டு விடக் கூடாது. சண்டை சச்சரவில் ஈடுபடக் கூடிய எந்த விசயமும் படிப்புடன் தொடர்புடையது அல்ல. படித்தீர்கள், எழுதினீர்கள் என்றால் நவாப் ஆவீர்கள். சண்டை சச்சரவில் ஈடுபட்டால் எப்படி (நவாப்) தலைவன் (மாஸ்டர்) ஆவீர்கள்? பிறகு நடத்தை தமோபிரதானமாக ஆகிவிடும். ஒவ்வொருவரும் தமது முன்னேற் றத்தைப் பற்றிய சிந்தனை செய்ய வேண்டும். ஓ ஆத்மாக்களே, தந்தையை நினைவு செய்தீர்கள் என்றால் பாவ கர்மங்கள் அழியும், மேலும் தெய்வீக குணங்களும் தாரணை ஆகும் என்று தந்தை கூறுகிறார். லட்சுமி நாராயணர் போல் ஆக வேண்டும் என்றால், தந்தைதான் அவர்களையும் கூட இப்படி ஆக்கினார். நீங்கள்தான் இந்த இராஜ்யத்தை ஆண்டு கொண்டிருந்தீர்கள் என்று தந்தை கூறுகிறார். இப்போது மீண்டும் நீங்கள் தான் ஆள வேண்டும். தந்தை இராஜயோகத்தை சங்கமத்தில்தான் கற்பிக்கிறார். நீங்கள் கல்பம் தோறும் இப்படி ஆகிறீர்கள். எப்போதும் கலியுகமே நடந்தபடி இருக்கும் என்பதும் அல்ல. கலியுகத்திற்குப் பிறகு சத்யுகம்..... இந்த சக்கரம் கண்டிப்பாக சுற்றவே செய்கிறது. சத்யுகத்தில் குறைவான மனிதர்கள் இருந்தனர், இப்போது மீண்டும் கண்டிப் பாக குறைய வேண்டும். இவை சகஜமாக புரிந்து கொள்ள வேண்டிய விசயங்களாகும். நடந்து முடிந்த கதையைக் கூறுகிறார். சின்னஞ்சிறு கதை. உண்மையில் பெரியது, ஆனால் புரிந்து கொள்வதில் சிறியது. 84 பிறவிகளின் இரகசியமாகும். உங்களுக்கும் கூட முன்பு தெரிந்திருக்க வில்லை. இப்போது நாம் படித்துக் கொண்டிருக்கிறோம் என்பதை புரிந்துள்ளீர்கள். இது சங்கம

யுகத்தின் படிப்பாகும். இப்போது நாடகத்தின் சக்கரம் சுற்றி வந்துள்ளது, பிறகு சத்யுகத்தில் இருந்து தொடங்கப் போகிறது. இந்த பழைய சிருஷ்டி மாற வேண்டும். கலியுகத்தின் காடு அழியும், பிறகு சத்யுகத்தின் மலர்த்தோட்டமாக ஆகும். தெய்வீக குணங்கள் நிறைந்தவர்கள் மலர்கள் என்று கூறப்படுகின்றனர். அசுர குணங்கள் நிறைந்தவர்கள் முட்கள் என்று கூறப்படுகின்றனர். எனக்குள் எந்த அவகுணங்களும் இல்லையல்லவா? என்று சோதிக்க வேண்டும். இப்போது நாம் தேவதை களாவதற்கு தகுதியுடையவர்களாக ஆகிக் கொண்டிருக்கிறோம் என்றால் தெய்வீக குணங்களை கண்டிப்பாக தாரணை செய்ய வேண்டும். தந்தை ஆசிரியராகவும் சத்குருவாகவும் ஆகி இங்கே வருகிறார் என்றால் நடத்தையை கண்டிப்பாக சீர் திருத்திக் கொள்ள வேண்டும். அனைவருடைய நடத்தையும் கெட்டு போய் இருக்கிறது என்று மனிதர்கள் கூறுகின்றனர். ஆனால் எது நல்ல நடத்தை என்று கூறப்படுகிறது என்பது கூட தெரியாது. இந்த தேவதைகளுடைய நடத்தை நன்றாக இருந்தது அல்லவா! என்று நீங்கள் புரிய வைக்க முடியும். இவர்கள் ஒருபோதும் யாருக்கும் துக்கம் கொடுத்ததில்லை. யாருடைய நடத்தையாவது நன்றாக இருக்கிறது என்றால், இவர் தேவியைப் போல இருக்கிறார், இவருடைய பேச்சு எவ்வளவு இனிமையாக இருக்கிறது என்று கூறுகின்றனர். தந்தை கூறுகிறார் - உங்களை தேவதைகளாக ஆக்குகிறேன் எனும் போது நீங்கள் மிகவும் இனிமையானவர்களாக ஆக வேண்டும். தெய்வீக குணங்களை தாரணை செய்ய வேண்டும். யார் எப்படி இருக்கிறார்களோ அப்படி தான் பிறரையும் உருவாக்குவார்கள். நீங்கள் அனைவரும் ஆசிரியர்கள் ஆக வேண்டும். ஆசிரியரின் குழந்தைகள் ஆசிரியர்கள். நீங்கள் பாண்டவ சேனையைச் சேர்ந்தவர்கள் அல்லவா! வழிகாட்டிகளின் வேலை அனைவருக்கும் வழி காட்டுவது. தெய்வீக குணங்களை தாரணை செய்ய வேண்டும். இல்லற விசயங்களிலும் கூட இருக்க வேண்டும். வீட்டிலும் கூட சேவை செய்ய முடியும். வீட்டிற்கு யாரேனும் வந்தால் அவர்களுக்கும் ஞானம் கற்பிப்பார்கள். தங்களுடைய இடத்தில் கீதா பாடசாலை திறந்து பலருக்கும் சேவை செய்தபடி இருப்பவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். இங்கே வந்து உட்கார்ந்து விட வேண்டும் என்பதல்ல. கன்னியாக்களுக்கு மிகவும் சகஜமானது தான். இரண்டு மாதங்கள் (ஆன்மீக சேவைக்காக) சுற்றி வந்து விட்டு பிறகு வீடு திரும்பி விட வேண்டும். வீட்டை சன்னியாசம் செய்ய கூடாது. உங்களுக்கு வீட்டில் இருந்து அழைப்பு வந்தது என்றால் நீங்கள் போகிறீர்கள், உங்களுக்கு தடை எதுவும் கிடையாது. இதில் இழப்பினுடைய விசயம் எதுவும் இல்லை, இன்னும் கூட ஊக்கம் அதிகமாகும். நாங்களும் கூட இப்போது புத்திசாலிகளாகி யுள்ளோம். வீட்டில் இருப்பவர்களையும் கூட எங்களுக்கு சமமாக மாற்றி உடன் அழைத்துச் செல்வோம் (என்கின்றனர்). வீட்டில் இருந்தபடியும் கூட சேவை செய்யக் கூடியவர்கள் பலர் இருக்கின்றார்கள், புத்திசாலிகளாக ஆகிவிடுகின்றனர்.

தந்தை முக்கியமான விசயத்தைப் புரிய வைக்கிறார் - தன்னை ஆத்மா என்று புரிந்து கொள்ளுங் கள் மேலும் தந்தையாகிய என்னை நினைவு செய்யுங்கள். தன்னை முன்னேற்றிக் கொள்ள வேண்டும். வீட்டில் இருப்பவர்களுக்கு இங்கே (மதுபனில்) இருப்பவர்களை காட்டிலும் நல்ல முன்னேற்றம் ஏற்பட முடியும். வீட்டிற்குப் போக வேண்டாம் என்று ஒருபோதும் தடை செய்யப்படுவதில்லை. அவர்களுக்கும் நன்மை செய்ய வேண்டும். நன்மை செய்யக் கூடிய பழக்கம் ஏற்பட்டுவிட்டது என்றால் அவர்களால் சும்மா இருக்க முடியாது. ஞானம்

மற்றும் நினைவு முழுமையாக இருந்தது என்றால் எந்த சுய மரியாதை கெடும்படியான வேலையும் செய்ய மாட்டார்கள். நினைவு செய்யாவிட்டால் மாயை கூட அடித்து விடுகிறது. ஆக இல்லறத் தில் இருந்தபடி தாமரை மலர் போல கண்டிப்பாக தூய்மை அடைய வேண்டும். வீட்டிற்கும் கூட செல்லுங்கள் என்று தந்தை சுதந்திரம் கொடுக்கிறார். அனைவரும் இங்கே வந்து எப்படி இருப்பீர் கள். எவ்வளவு பேர் வருகிறார்களோ அத்தனை பேருக்காகவும் வீடு முதலானவை கட்ட வேண்டியதாக இருக்கும். கல்பத்திற்கு முன்பு என்னவெல்லாம் நடந்ததோ அது மீண்டும் நடந்தபடி இருக்கும். குழந்தைகளும் அதிகரித்தபடி இருப்பார்கள். நாடகத்தில் இல்லாத எதுவும் நடக்காது. இந்த சண்டைகள் முதலானவை, இவ்வளவு மனிதர்கள் இறப்பது முதலானவை அனைத்தும் நாடகத்தில் பதிவாகியுள்ளது. நடந்து முடிந்தது மீண்டும் நடக்கும். கல்பம் தோறும் எதை புரிய வைத்தேனோ அதையே தான் இப்போதும் புரிய வைக்கிறேன். மனிதர்கள் என்னதான் சிந்தனைகள் செய்தாலும் பதிவாகி யிருக்கக் கூடிய என்னுடைய நடிப்பைத்தான் நடிப்பேன். நாடகத்தில் ஏற்றத் தாழ்வு ஏற்பட முடியாது. கல்பத்திற்கு முன்பு படித்ததைத்தான் படிப்பீர்கள்.

ஒவ்வொருவருடைய நடத்தையின் மூலமும் சாட்சாத்காரமும் (காட்சிகளும்) தெரிந்தபடி இருக்கும். இவர் என்ன படிக்கிறார். எந்த பதவி அடைவார். நல்ல சேவை செய்கிறார்கள், திடீரென்று விபத்து ஏற்பட்டது என்று வைத்துக் கொள்ளுங்கள், நல்ல குலத்தில் சென்று பிறவி எடுப்பார்கள். சுகத்தில் இருப்பார்கள். எந்த அளவு பிறருக்கு சுகத்தை கொடுத்தாரோ அந்தளவு அவருக்கு சுகம் கிடைக்கும். இந்த வருமானம் ஒருபோதும் குறைந்து விடாது. சத்யுகத்தில் எங்கே வெற்றியோ அங்கே பிறவி கிடைக்கும். பலருக்கு சுகத்தை கொடுத்திருந்தால், வாயில் தங்க ஸ்பூன் கிடைக்கும். அதைவிட குறைவானது வெள்ளி அதையும்விட குறைவானது பித்தளை கிடைக்கும். புரிகிறதல்லவா! எவ்வளவு நம்முடைய நினைவு இருக்கிறதோ அந்தளவு ராஜா, ராணி, பிரஜைகள் என அனைத்துமாக ஆகக் கூடியவர்களாக இருப்பார்கள். நல்ல விதமாக படிக்கா விட்டால் தெய்வீக குணங்களை தாரணை செய்யாவிட்டால் பதவி குறைந்துவிடும். நல்ல மற்றும் கெட்ட கர்மங்கள் கண்டிப்பாக முன்னால் வருகின்றன. நாம் எந்தளவு சேவை செய்து கொண்டி ருக்கிறோம், இப்பேது சரீரம் விடுபட்டுவிட்டால் எந்த பதவி அடைவோம் என்பது ஆத்மாவுக்கும் தெரியும். இப்போது நீங்கள் படித்து முன்னேறிக் கொண்டிருக்கிறீர்கள். சிலர் கெட்டும் கூட போகிறார்கள், அப்போது இவர்கள் அதிர்ஷ்டத்தில் இல்லை என்று கூறுவோம். பாபா எவ்வளவு உயர்வாக ஆக்குகிறார். இறைவனின் வீட்டிலிருந்து யாரும் வெறும் கையோடு செல்ல மாட்டார்கள். இப்போது இறைவன் உங்கள் முன்னால் இருக்கிறார். யாருக்காவது நீங்கள் இரண்டு வார்த்தைகளாவது சொல்லுங்கள், அவர்கள் கூட கண்டிப்பாக பிரஜைகளில் வருவார்கள். தேவி தேவதா தர்மத்தைச் சேர்ந்தவர்கள் இதுவரை வந்து கொண்டே இருக்கிறார்கள். ஆனால் இப்போது தூய்மை யற்றவர்களாக ஆகிவிட்டதால் தன்னை ஹிந்து என்று சொல்லிக் சொல்கின்றனர். பாபாவிடம் உள்ளதைப் போலவே உங்களிடமும் ஞானம் இருக்கிறது. தந்தை ஞானக் கடலாக இருப்பவர். இந்த வரலாறு புவியியல் எப்படி மீண்டும் மீண்டும் நடக்கிறது என்பதை விளக்குகிறார். ஆசிரியரும் கூட மாணவர்கள் படிப்பதை வைத்து இவர் எவ்வளவு மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி அடைவார் என்பதைத் தெரிந்து கொள்வார். ஒவ்வொருவரும் தாமே கூட அறிவார்கள். சிலர் தெய்வீக

குணங்களில் பக்குவமற்றவர்களாக, சிலர் நினைவு செய்வதில் பக்குவமற்றவர்களாக, சிலர் ஞானத்தில் பக்குவமற்றவர்களாக இருக்கின்றனர். பக்குவமற்றவராக இருப்பதால் தேர்ச்சி யடையாமல் போய் விடுகின்றனர். இன்று பக்குவமற்றவராக இருக்கிறார், நாளை பக்குவமடைய முடியாது என்பதும் அல்ல. தீவிர முயற்சி செய்வார்கள். நாம் எந்தெந்த பாடத்தில் தவறி விடுகிறோம் என்பதை தாமே கூட உணர்கின்றனர். இன்னார் நம்மை விட புத்திசாலிகளாக உள்ளனர். கற்றுக் கொண்டு புத்திசாலிகளாகவும் ஆக முடியும். தேக அபிமானம் இருந்தது என்றால் பிறகு எதைக் கற்க முடியும்! நான் ஆத்மா என்பதை உறுதியாக்கிக் கொண்டு விடுங்கள். தந்தை நினைவைக் கொடுத்திருக்கிறார். தந்தை கூறுகிறார் - என்னை நினைவு செய்தீர்கள் என்றால் பாவ கர்மங்கள் அழியும், பிறகு தெய்வீக குணங்கள் தாரணை ஆகும். நான் எதுவரை தகுதி வாய்ந்தவனாக ஆகியுள்ளேன்? என்று தனது நாடியைச் சோதிக்க வேண்டும்.

நீங்கள் இப்போது சிருஷ்டியின் முதல் இடை கடைசியின் ஞானத்தை கற்றுக் கொண்டி ருக்கிறீர்கள். இந்த இராஜயோக ஞானத்தை தந்தையைத் தவிர வேறு யாரும் கற்றுத் தர முடியாது. குழந்தைகள் கற்றுக் கொண்டிருக் கின்றனர். நமது குலத்தின் பிராமணர்கள் எத்தனை பேர் என்று குழந்தைகள் கேட்கின்றனர். இது முழுமையாக எப்படி தெரியும்? வந்து போனபடி இருக்கின்றனர். இப்போது புதிது புதிதாக வந்தபடி இருக்கின்றனர். நல்லது.

இனிமையிலும் இனிமையான தேடிக்கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் காலை வணக்கமும். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. தனது தெய்வீக நடத்தையை உருவாக்கிக் கொள்ள வேண்டும். தெய்வீக குணங்களை தாரணை செய்து தனக்கும் மற்றும் அனைவருக்கும் நன்மையைச் செய்ய வேண்டும். அனைவருக்கும் சுகம் கொடுக்க வேண்டும்.

2. சதோபிரதானம் ஆவதற்காக புத்தியை ஒரு தந்தையிடம் ஈடுபடுத்த வேண்டும். புத்தியை அலைய விடக் கூடாது. தந்தைக்குச் சமமாக ஆசிரியர் ஆகி அனைவருக்கும் சரியான வழியைக் காட்ட வேண்டும்.

வரதானம் : நடந்தாலும் சுற்றினாலும் (எந்த காரியம் செய்தாலும்) நம்மிடமிருந்து அஷ்ட சக்திகளின் ஒளிகதிர்களின் அனுபவம் செய்ய வைக்கக் கூடிய ப்ரிஸ்தா சொரூபம் ஆகுக.

எது மிகவும் விலையுயர்ந்த மதிப்புமிக்க கறையற்ற வைரமாக இருக்கிறதோ, அதை லைட்டிற்கு முன்னால் வைத்தீர்கள் என்றால் விதவிதமான வண்ணங்கள் தென்படும். அதுபோல எப்பொழுது நீங்கள் பரிஸ்தா சொரூபம் ஆகிறீர்கள் என்றால் உங்கள் மூலம் நடந்தாலும் சுற்றினாலும் அஷ்டசக்திகளின் ஒளிகதிர்களின் அனுபவம் ஏற்படும். ஒருசிலருக்கு உங்கள் மூலம் பொறுமை சக்தியின் உணர்வு வரும், ஒரு சிலருக்கு பகுத்தறியும் சக்தியின் அனுபவம் வரும், ஒவ்வொரு வருக்கும் ஒவ்வொருவிதமான சக்திகளின் அனுபவம் ஏற்படும்.

சுலோகன்: யார் தனது ஒவ்வொரு செயலின் மூலம் அனைவருக்கும் துண்டுதல்

ஏற்படுத்துகிறார்களோ, அது தான் உடனடி பலனை அடைவதாகும்.

ஜனவரி 2024 அவ்யக்த மாதத்திற்காக விசேஷ முயற்சிக்கான பாயிண்ட்ஸ் (ஞானமுத்துக்கள்)

இந்த ஜனவரி மாதத்தில் விசேஷமாக அமைதியின் அனுபவம் செய்வதற்காக அதாவது பிரம்மா பாபாவிற்கு சமமாக டபுல் லைட் பரிஸ்தா ஆவதற்காக முயற்சிக்கான பாயிண்ட்ஸ் முரளியின் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த குறிப்புக்களை இந்த ஜனவரி மாதத்தில் விசேஷமாக அமைதியின் அனுபவம் செய்வது அதாவது பிரம்மா பாபாவிற்கு சமமாக டபுல் லைட் பரிஸ்தா ஆவதற்காக முயற்சிக்கான பாயிண்ட்ஸ் முரளிக்கு கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஞான குறிப்புக்களை ஜனவரி மாதத்தின் பத்ரபுஷ்பத்திலும் இருக்கிறது. தயவுசெய்து அனைத்து பிராமண குழந்தைகளும் இதன் அடிப்படையில் கவனம் வைத்து தினந்தோறும் தனிமையில் அமர்ந்து குறைந்ததிலும் குறைந்தது 10 நிமிடம் அவ்யக்த அமைதியை அனுபவம் செய்து அதாவது முழு நாளும் டபுல் லைட் பரிஸ்தா நிலையில் இருந்து தனது சிரேஷ்ட எண்ணங்கள் மூலம் சைகை (அமைதி) யினால் காரியங்கள் செய்து தனது சேவை நிலையங்களை சூட்சமவதனமாக உருவாக்குங்கள், இடை- இடையில் தங்களுக்குள் சந்தித்து இந்த ஞானக்கருத்துக்கள் மீது ஆழமான ஆன்மீக உரையாடலை செய்துக் கொண்டே அனுபவங்களை பகிர்ந்துக் கொள்ளுங்கள், நம் அனைவருக்கும் இந்த டபுல் லைட் மனநிலை அதாவது அமைதியின் ஆழமான அனுபவம் தான் பரமாத்மாவை வெளிப்படுத்துவதற்கான நிமித்தம் ஆகிறது.

அவ்யக்த அமைதி மூலம் டபுள் லைட்டின் பரிஸ்தா மனநிலையை அனுபவம் செய்யுங்கள்

சங்கமயுகத்தின் விசேஷமான சக்தி அமைதியின் சக்தியாகும், அமைதியில் இருப்பதினால் டபுள் லைட் பரிஸ்தா மனநிலை எளிதாகிவிடும். இந்த மனநிலையில் இருந்தால் எந்த விதமான காரியமும் சுமையாக இருக்காது. ஆகையால் காரியங்கள் செய்துக் கொண்டிருக்கும் பொழுது இடை இடையில் நிராக்காரி மற்றும் பரிஸ்தா சொரூபத்தின் டிரில் செய்துக் கொண்டே இருங்கள். சாகார பிரம்மா பாபாவை பார்த்தீர்கள், சதா டபுள் லைட்டாக இருந்து அமைதியான மனநிலை மூலம் நொடியில் குழந்தைகளை பார்வையினால் திருப்பதி செய்தார். அதுபோல பிரம்மா பாபாவை பின்பற்றினால் சகஜமாகவே பாபாவிற்கு சமமாகிவிடலாம்.